**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.926/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-3/PW- 2 | Village: | |
| Name | : கமர்னிஷா | Age | :35 |
| Father's/Husband's Name | : அல்அமீன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 09.10.2024**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது கொரநாட்டுக்கருப்பூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன், அசா1 எனது அக்கா ஆவார். எதிரி முஜாஹிதின் அசா1ன் கணவர் ஆவார். எதிரி ரோஜாக்கனி அசா1ன் நாத்தனார் ஆவார். எதிரி தாஜூனிசா அசா1ன் மாமியார் ஆவார். 1, 3 எதிரிகள் இறந்து விட்டார்கள். எனது அக்காவிற்கு 30.09.1999ம் தேதி 1ம் எதிரியுடன் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எதிரி ரோஜாக்கனி தேரழுந்தூரில் வசித்து வருவதாக சொன்னார்கள்., ஆனால் அவர் தொடர்ந்து

அவர் அம்மா வீட்டில்தான் இருந்தார். எனது அக்கா 4 மாத கர்ப்பமாக இருந்தபோது 1வது எதிரி ரூ.50,000/- பணம் கேட்டு கொடுக்கவில்லை என்பதால் எனது அக்காவை 1வது எதிரி ரோட்டில் விட்டு விட்டு சென்று விட்டார். மேலும் ரூ.50,000/- பணத்தோடு வீட்டிற்கு வா இல்லை என்றால் உன்னை வாழ வைக்க மாட்டேன் என்று எனது அக்காவை பார்த்து சொல்லிவிட்டு சென்றார். பிறகு எனது அக்கா , நானும் எனது அம்மாவும் எனது அத்தை வீட்டிற்கு சென்றோம் அங்கு வந்த எனது அக்காவின் கணவர் எனது அக்கா ரூ.50,000/- கொடுத்தால் வெளிநாட்டிற்கு போ இல்லையென்றால் போகாதே என்று 1, 3 எதிரிகள் சொன்னதாக சொல்லிக் கொண்டிருந்தார். அதன் பிறகு எனது அக்காவை நாங்கள் சண்டை போட்டு அழைத்து வந்துவிட்டோம். அதன் பிறகு எனது அக்காவின் மூத்த மகளுக்கு 1 வயது இருக்கும் போது இருவீட்டார்கள் சமாதானம் பேசி எனது அக்காவை கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகும் எதிரிகள் எனது அக்காவை நகை போடவில்லை பணம் கொடுக்கவில்லை என்று டார்ச்சர் செய்து 6 மாதத்தில் திருப்பி அனுப்பிவிட்டார்கள். எதிரிகள் அவ்வாறு தொடர்ந்து பிரச்சனை செய்து வந்ததால் எனது அக்கா ஒரு கால கட்டத்தில் எங்கள் வீட்டிற்கே வந்துவிட்டார். எனது அக்காவை கேட்டபோது எதிரிகள் செய்யும் டார்ச்சர் தாங்க முடியவில்லை என்றும் எனது அக்காவின் கணவர் அவரது தங்கச்சியான 2ம் எதிரிதான் எல்லாமே என்று கூறியதாகவும் சொன்னார். அதன் பிறகு கும்பகோணம் நால்ரோட்டில் இருக்கும் காவல்நிலையத்தில் கேஸ் கொடுத்தோம். அப்போது 1வது எதிரி வெளிநாட்டில் இருந்து வந்ததை கேள்விபட்டுதான் நாங்கள் அவ்வாறு கேஸ் கொடுத்தோம். புகார் சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் உள்ளூரிலேயே திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நான் எனது கணவர் வீட்டில் வசித்தேனா அல்லது பெற்றோர் வீட்டில் வசித்தேனா என்றால் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன். எப்போதாவது அம்மா வீட்டிற்கு செல்வேன் என்றால் சரிதான். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல விசாரணை செய்தார்கள். எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் தேதி தற்போது மறந்துவிட்டது. எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையில் எனது அக்காவின் திருமண தேதியை குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன்.

2. போலிசார் விசாரணையில் 2 வது எதிரி திருமணத்திற்கு பிறகு தேரழந்தூரில்தான் இருந்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். அவரது வீட்டில் இருந்ததாகதான் சொல்லியுள்ளேன். ரோஜாக்கனி கணவர் வீடு தேரழந்தூரில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும் என்று போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். போலிசார் விசாரணையில் 1 வது எதிரி எனது அக்கா 4 மாதம் கர்ப்பமாக இருந்தபோது அவரை ரோட்டில் விட்டு சென்றதாகவும் எனது அக்காவை நானும் எனது அம்மாவும் அழைத்து வந்ததாகவும் சொன்னேனா என்றால் சொன்னேன். அது எந்த தேதியில் நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை.

3. திருமணத்தின்போது ஜமாத்தார்கள் முன்னிலையில் சீர்வரிசை குறித்து எழுதப்படும் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது ஜமாத்தில் சீர்வரிசை குறித்து எழுதுவது வழக்கம் என்றாலும் நான் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2018 க்கு முன்பாக எந்த காவல் நிலையத்திலும் எனது அக்கா எதிரிகளுக்கு எதிராக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு எங்கள் அக்கா வீட்டிற்கு நான் எத்தனை முறை சென்றிருப்பேன் என்றால் நிறைய முறை சென்றிருப்பேன். எனது அக்காவை அவரது கணவர் வீட்டில் விடமாட்டார்கள் என்பதால் நாங்கள் சென்று பார்ப்போம் என்றால் சரிதான். எனது அக்காவை அவரது கணவர் வீட்டார் நல்ல முறையில்தான் பார்த்துக்கொண்டார்கள் என்றாலும் எனது அக்கா மற்றும் எனது தாயாரின் பிடிவாதத்தால்தான் அவர் சேர்ந்து வாழவில்லை என்றாலும் சரியல்ல. எனது அக்கா எங்கள் வீட்டிலிருந்த போது அவரது மூத்த மகள் மட்டும் எதிரிகளின் வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். அப்போது அவருக்கு 14 வயதிருக்கும் என்றால் சரிதான். எனது அக்கா மற்றும் தாயார் மூத்த மகளை பராமரிக்காததால்தான் அவர் எதிரியுடன் இருந்தார் என்றால் சரியல்ல. 2 வது எதிரி ரோஜாக்கனி எந்த காலத்திலும் அவரது தாயார் வீட்டில் இல்லை என்றாலும் திருமணத்திற்கு பிறகு அவரது கணவர் வீட்டில்தான் வசித்து வந்தார் என்றாலும் எனக்கு தெரியாத விஷயத்தை தெரிந்ததுபோல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.10.10 10:34:54 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**